## சட்டப்பேரவை பொதுத்தேர்தல் – 2026

**தமிழ்நாடு – புதுச்சேரி சட்டப்பேரவை பொதுத் தேர்தலில்**

**கழக வேட்பாளராகப் போட்டியிட விரும்புவோர்**

**விண்ணப்பம் தருவதற்கான தேதி விவரம்.**

**பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு.**

நடைபெறவிருக்கும் தமிழ்நாடு – புதுச்சேரி மாநில சட்டப் பேரவை பொதுத்தேர்தலுக்கு கழகத்தின் சார்பில் வேட்பாளராக போட்டியிட விரும்புவோர் **20–2–2026 வெள்ளிக்கிழமை முதல் 2–3–2026 திங்கட்கிழமை வரை தலைமைக் கழகத்தில் விண்ணப்பித்திட வேண்டுகிறேன்.**

தமிழ்நாடு – புதுச்சேரி மாநில சட்டப்பேரவை
தொகுதிக்கான விண்ணப்பக் கட்டணம் :

| | |
|---|---|
| பொதுத் தொகுதி | ரூ. 25,000/– |
| மகளிர்க்கும் மற்றும் தனித் தொகுதிக்கும் | ரூ. 15,000/– |

குறிப்பு : *வேட்பாளராக போட்டியிட விண்ணப்பித்தவர்கள் கூட்டணியின் தோழமைக் கட்சிகளுக்கென பகிர்ந்து கொள்ளப்பட்ட தொகுதிகளில் போட்டியிட விண்ணப்பித்திருப்பின் அவர்களது விண்ணப்பக் கட்டணம் பின்னர் திருப்பித் தரப்படும்.*

*விண்ணப்பபடிவம் தலைமைக் கழகத்தில் ரூ..1,000/– வீதம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.*

"அண்ணா அறிவாலயம்"
சென்னை – 18.
நாள் : 18–02–2026.

**துரைமுருகன்,**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.

---

### "மாபெரும் தமிழ்க் கனவு" நிகழ்ச்சி மூலம்

# தமிழ்நாட்டின் வரலாற்றையும் தமிழ்மொழியின் சிறப்பையும் இளைய தலைமுறையினரிடம் சேர்க்கிறார் முதல்வர்!

### அமைச்சர் கோவி.செழியன் பேச்சு!



*சென்னை, பிப். 20-*

தமிழ்நாட்டின்வரலாற்றையும், தமிழ் மொழியின் சிறப்பையும் இளைய தலைமுறையினரிடம் கொண்டு சேர்க்கும் விதமாக "மாபெரும் தமிழ்க் கனவு" என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சியினைதந்தவர்முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் - என்று உயர்கல்வித் துறைஅமைச்சர்முனைவர் கோவி.செழியன்தெரிவித்தார்.

சென்னை, செயின்ட் ஜோசப் பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற 400-வது மாபெரும் தமிழ்க் கனவுநிகழ்ச்சியைமாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் உயர் கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன் பேசியதாவது :-

"மாபெரும் தமிழ்க் கனவு" எனும் தமிழ் மரபு மற்றும்பண்பாட்டுப்பரப்புரை நிகழ்ச்சி பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாளான 03.02.2023அன்றுதொடங்கப்பட்டது.இதன்100-வது நிகழ்ச்சி சென்னை அண்ணாநூற்றாண்டுநூலகத்தில்முதலமைச்சர்அவர்களின் தலைமையில் 24.04.2023 அன்று நடைபெற்றது. கல்லூரி இளைஞர்கள் தங்களின் அடுத்த கட்ட இலக்குகளை நோக்கிச்செல்லும்வகையில்இந் நிகழ்ச்சி இருப்பதால், ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்துநடத்தப்படும் எனஅப்போதுமுதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்.

அவ்வறிவிப்பிற்கிணங்க, "மாபெரும் தமிழ்க் கனவு" நிகழ்வுகள், ஜூலை2023முதல்,தமிழர்களின் மரபு, சமூகப் - பொருளாதாரச் சமத்துவ வளர்ச்சிஆகியவற்றில்ஆர்வமும், அக்கறையும் ஏற்படுத்தும் வகையில் தமிழ் இணையக் கல்விக் கழகம் மூலம் மேலும் 100 நிகழ்வுகள்நடத்திமுடிக்கப்பட்ட நிலையில், இக்கல்வியாண்டில் (2025-26), தமிழ் இணையக் கல்விக் கழகத்துடன் உயர்கல்வித் துறையும் இணைந்து, 200 கல்லூரிகளில்200சொற்பொழிவுகள் நடத்தத் திட்டமிடப்பட்டு, இதுவரையில் 199 சொற்பொழிவுகள்நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. மொத்தமாக 399 நிகழ்வுகள்நடத்திமுடிக்கப்பட்டு, தற்போது 400-வது சொற்பொழிவு நிகழ்ச்சி சென்னை, செயின்ட் ஜோசப் பொறியியல் கல்லூரியில் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

சேர,சோழ,பாண்டியர்கள் என பல மன்னர்கள் ஆண்டதமிழ்நாட்டின்வரலாற்றையும், சிறப்பையும் ஆயிரம் ஆண்டுகள் கடந்தும்இளையதலைமுறையினரிடம் கொண்டு சேர்க்கும் விதமாக "மாபெரும் தமிழ்க் கனவு" என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சியினை தந்தவர் முதலமைச்சர் அவர்கள்.

மேலும், இளைய தலைமுறையினர்வாழ்க்கையில் எதிர்கொள்ள வேண்டிய சவால்கள், சமூகப் பொருளாதார மேம்பாடு அடைவதற்கான வழிமுறைகள், அறிவியல்மற்றும்தொழில்நுட்ப வளர்ச்சிகள், வேகமாக மாறி வரும் உலகச் சூழலில் தடைகளைத் தாண்டித்தடம்பதிப்பதற்கான வழிகாட்டுதல்கள் ஆகியவற்றை நேரடியாக இவ்வகைச் சொற்பொழிவுகளின் மூலம் கல்லூரி மாணவர்களுக்குமத்தியில் எடுத்துச் செல்லும்போது, ஓர் உணர்வுப்பூர்வமான பந்தத்தைஏற்படுத்திஅவர்களைநல்வழிப்படுத்தஇயலும்.

ஒரு தாய் தந்தை செய்யாததை, ஒரு ஆசிரியர் செய்யாததை,ஒருகல்லூரி செய்யாததை முதல மைச்சர் அவர்கள் சிந்தித்து ஒரு கல்வியாண்டில்2இலட்சம் மாணவர்கள்பயன்பெறும் வகையில் 26 சொற்பொழிவாளர்களை 200 நிகழ்ச்சிகளில்பேசவைத்து மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறார்.

இந்த அரிய முயற்சியினைமுன்னெடுத்ததமிழ்நாடுமுதலமைச்சர்அவர்களுக்கு நமது நன்றிகளை தெரிவிப்போம்.நாம்தமிழ் மொழியை பாதுகாப்போம், தமிழ் மொழியை வளர்ப்போம்,மற்றமொழிகளை விட தமிழ் மொழி தான் சிறந்தது என்று உலகிற்கு காட்ட மாபெரும் தமிழ்க் கனவு திட்டம் பயன்படட்டும்.

இந்த நிகழ்ச்சியில் பங்கேற்கும்மாணவர்களுக்கு 'உயர்கல்விமற்றும்வேலைவாய்ப்பு வழிகாட்டி', 'தமிழ்ப்பெருமிதம்'ஆகிய கையேடுகள் வழங்கப்படுகின்றன. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விருதுகள் வழங்கவும் வழிவகை செய்துள்ளார்கள். அவ்வாறாக, 'தமிழ்ப் பெருமிதம் 'சிற்றேட்டிலுள்ள குறிப்புகளைவாசித்துச்சிறப்பாக விளக்கம்அளிக்கும்மாணவர்களைப் பாராட்டி பெருமிதச்செல்வி / பெருமிதச்செல்வன் எனப் பட்டம் சூட்டிச் சான்றிதழ்களும், பரிசும் நிகழ்வின் இறுதியில் வழங்கப்படுகிறது. சொற்பொழிவாளர்களிடம் தரமான கேள்விகளை எழுப்பும் மாணவர்களைப்பாராட்டிகேள்வியின்நாயகி/கேள்வியின் நாயகன் எனப் பட்டம் சூட்டிச் சான்றிதழும் பரிசும் வழங்கப்படுகிறது. மேலும், இந்நிகழ்ச்சியில் 2025-26ஆம் கல்வியாண்டிற்கான பாரதி இளங்கவிஞர்விருதுஒருமாணவருக்கும், ஒரு மாணவிக்கும் வழங்குவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

இவ்வாறு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் உயர் கல்வித் துறை செயலாளர் முனைவர்பொ.சங்கர்,கல்லூரிக்கல்விஆணையர்திருமதி எ. சுந்தரவல்லி, தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் முனைவர் ச. விசாகன், எழுத்தாளர் ஆண்டாள் பிரியதர்ஷினி, செயின்ட் ஜோசப் பொறியியல் கல்லூரி தலைவர் முனைவர் பாபு மனோகரன், கல்லூரிக் கல்வி இயக்ககமற்றும்தொழில்நுட்பக் கல்வி இயக்கக அலுவலர்கள், கல்லூரி முதல்வர்கள் மற்றும் 13 கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் கலந்து கொண்டனர்.

---

### நாடு முன்னேற்றமடைய அனைத்து மாநிலங்களும் சுயாட்சி பெற்றவையாக இருக்க வேண்டியது அவசியம்!

# மலரட்டும் மாநில சுயாட்சி! முதல்வரின் கரத்துக்கு வலு சேர்ப்போம்; வெல்வோம் ஒன்றாக!

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

**சென்னை, பிப். 20 -**

**நாடு முன்னேற்றமடைய, பெருமையடைய அனைத்து மாநிலங்களும் சுயாட்சி பெற்றவையாக இருக்க வேண்டியது அவசியமெனவும், மலரட்டும் மாநில சுயாட்சி, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கரத்துக்கு வலு சேர்ப்போம்; வெல்வோம் ஒன்றாக எனவும் 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தியுள்ளது.**

அது வருமாறு:-


தினகரன்
பிப்ரவரி 19, 2026 வியாழக்கிழமை
மலரட்டும் மாநில சுயாட்சி
நாடு சுதந்திரம் அடைந்த நாளில் இருந்து, மாநில சுயாட்சி கொள்கை தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக, தமிழ் நாட்டில் இருந்துதான் இந்த குரல் மேலோங்கி எழுகிறது. மாநிலங்களின் உரிமைகள் குறித்து 1963ம் ஆண்டிலேயே அறிஞர் அண்ணா நாடாளுமன்றத்தில் முழங்கினார். 1967ம் ஆண்டு திமுக தேர்தல் அறிக்கையிலும் இது வலியுறுத்தப்பட்டது. அண்ணா மறைவுக்கு பிறகு கலைஞர், 'மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி' என்பதை ஐம்பெரும் முழக்கங்களில் ஒன்றாக வடித்துக்கொடுத்தார்.
ஒன்றிய-மாநில அரசுகளின் உறவுகளை மேம்படுத்த 1969ம் ஆண்டு கலைஞர் முதல்வராக

நாடு சுதந்திரம் அடைந்த நாளில் இருந்து, மாநில சுயாட்சி கொள்கை தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக, தமிழ்நாட்டில் இருந்துதான் இந்த குரல் மேலோங்கி எழுகிறது. மாநிலங்களின் உரிமைகள் குறித்து 1963ம் ஆண்டிலேயே அறிஞர் அண்ணா நாடாளுமன்றத்தில் முழங்கினார். 1967ம் ஆண்டு தி.மு.க. தேர்தல் அறிக்கையிலும் இது வலியுறுத்தப்பட்டது.

அண்ணா மறைவுக்கு பிறகு கலைஞர், 'மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி' என்பதை ஐம்பெரும் முழக்கங்களில் ஒன்றாக வடித்துக் கொடுத்தார்.

ஒன்றிய - மாநில அரசுகளின் உறவுகளை மேம்படுத்த 1969ம் ஆண்டு கலைஞர் முதல்வராக இருந்தபோது, ஓய்வு பெற்ற நீதிபதிகள் பி.வி.ராஜமன்னார், டாக்டர் லட்சுமண சாமி முதலியார், பி. சந்திரரெட்டி ஆகியோர் கொண்ட உயர்மட்ட குழுவை அமைத்தார். இந்த குழு விரிவாக ஆய்வுசெய்து 1971ம் ஆண்டு தனது அறிக்கையை சமர்ப்பித்தது. இந்த குழு அளித்த முக்கிய பரிந்துரைகளை தமிழக சட்டமன்றத்தில் தீர்மானமாகவும் நிறைவேற்றினார் கலைஞர்.

இதனைத்தொடர்ந்து, ஒன்றிய - மாநில அரசுகளுக்கு இடையான உறவுகளை மேம்படுத்த, ஒன்றிய அரசு சார்பில் 1983ம் ஆண்டு நீதிபதி சர்க்காரியா தலைமையிலான ஆணையம், 2000ம் ஆண்டு வெங்கடாசலையா ஆணையம் 2007ம் ஆண்டு நீதிபதி பூஞ்சி தலைமையிலான குழு அமைக்கப்பட்டது. இந்த குழுக்கள் சார்பில் ஆயிரக்கணக்கான பக்கங்கள் கொண்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டும், இதுவரை எந்த முன்னேற்றமும் இல்லாமல், ஏமாற்றம் தொடர்கிறது.

எனவே, எல்லா அதிகாரமும் கொண்டவைகளாக மாநில அரசுகளை மாற்றும் வகையில் அரசியலமைப்பு சட்டத்தில் திருத்தம் கொண்டு வர முயற்சிக்கும் சட்ட முன்னெடுப்புகளை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மேற்கொண்டுள்ளார்.

மாநிலங்களின் நியாயமான உரிமைகளை பாதுகாக்கவும், ஒன்றிய - மாநில அரசுகளுக்கு இடையேயான உறவுகளை மேம்படுத்தவும் உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி குரியன் ஜோசப் தலைமையில் கே.அசோக் வர்தன் ஷெட்டி மற்றும் மு.நாகநாதன் ஆகியோரை உறுப்பினர்களாக கொண்டு அமைக்கப்பட்ட உயர்மட்ட குழு தனது அறிக்கையை, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் கடந்த இரு தினங்களுக்கு முன்பு சமர்ப்பித்தது. அரசியலுக்கு அப்பாற்பட்ட முயற்சியாக அமைக்கப்பட்ட இந்த குழு, தற்போது கூட்டாட்சி முறை எதிர்கொள்ளும் சவால்களை தனது ஆய்வறிக்கையில் விரிவாக குறிப்பிட்டுள்ளது.

அனைத்து அதிகாரங்களையும் தன்வசம் வைத்துள்ள ஒன்றிய அரசு, அவற்றை எதேச்சதிகார மனப்பான்மையோடு பயன்படுத்துவதோடு, மாநில அரசுகளையும் மதிப்பதில்லை. எல்லாவற்றுக்கும் மாநில அரசுகள், ஒன்றிய அரசின் தயவை எதிர்பார்த்து காத்துக்கிடக்க வேண்டியுள்ளது. மாநில அரசின் பட்டியலில் உள்ள முக்கிய ஆதார ங்களைக்கூட ஒத்திசைவு பட்டியலுக்கு மடைமாற்றம் செய்யும் பணிகள் இன்றைய ஒன்றிய அரசு மேற்கொண்டு வருகிறது. மாநிலங்களின் உரிமைகள் ஒவ்வொன்றாக பறிக்கப்பட்டு மாநில மக்களின் அடிப்படை உரிமைகளையே ஒன்றிய அரசிடம் போராடி பெறவேண்டிய இக்கட்டான நிலை உருவாகியுள்ளது.

இந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காண அனைத்து மாநிலங்களும் சுயாட்சி பெற்றவையாக இருக்க வேண்டும். மாநிலங்கள் வலுவாக இருந்தால்தான் ஒன்றிய அரசால் வலுவாக இருக்க முடியும். மாநிலங்கள் வளர்ந்தால்தான், ஒட்டுமொத்த நாடும் வளரும், பெருமை அடையும். மலரட்டும் மாநில சுயாட்சி. முதல்வரின் கரத்துக்கு வலு சேர்ப்போம். வெல்வோம் ஒன்றாக...!

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---


# வரும்...!



எங்கள்

மார்ச் (1) ஒன்னின்

மதிநுட்ப
அரசியலே

எடப்பாடி அரசியல்
முடிவுக்கு வரும்...

எகத்தாள
அரசியல்
தெளிவுக்கு
வரும்..

பா.ஜ.க. அரசியல்
தலைக்
குனிவுக்கு வரும்..

மறுமுறை
மகுடத்துக்கு
வரும்...

– என்ன
நாஞ்சொல்றது



**மருது அழகுராஜ்**
கழக செய்தித் தொடர்புக்
குழுத் துணைத் தலைவர்


---

### திருநெல்வேலி மேற்கு மாவட்டம்

# அம்பாசமுத்திரம் கிழக்கு, அம்பாசமுத்திரம் மேற்கு ஆகிய ஒன்றியக் கழகப் பொறுப்புக்குழு உறுப்பினர்கள் நியமனம்

## தலைமைக் கழக அறிவிப்பு!

கழக நிர்வாக வசதிக்காகவும் கழகப் பணிகள் செம்மையுற நடைபெற்றிடவும் 16.12.2025 அன்று திருநெல்வேலி மேற்கு மாவட்டம், அம்பாசமுத்திரம் கிழக்கு, அம்பாசமுத்திரம் மேற்கு ஆகிய ஒன்றியங்கள் பிரிக்கப்பட்டு, ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டனர். மேற்சொன்ன ஒன்றியங்களில் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, அந்தந்த ஒன்றியங்களுக்கான பொறுப்புக்குழு உறுப்பினர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**அம்பாசமுத்திரம் கிழக்கு ஒன்றியம்**

பொறுப்புக்குழு உறுப்பினர்கள் : 1. ப.முத்துபாண்டி, தெற்கு தெரு, அயன்திருவாலீஸ்வரம், 2. ஈ.பொன்னுசாமி, வெயிலான் தெரு, பிரம்மதேசம். 3. மு. பூதத்தான், சுப்பிரமணியசுவாமி கோவில் தெரு, மன்னார்கோவில், 4. ச.பாபநாசம், வடக்கு தெரு, வைராவிகுளம், 5. சே. மீரான்பண்ணையார், மெயின் ரோடு, வெள்ளாங்குளி. 6. அ. அசோக், நாராயணசுவாமி கோவில் தெரு, வாகைகுளம். 7. சு. வேம்பு, தெற்கு பாப்பான்குளம், வாகைகுளம். 8.திருமதி ஆர்.சுந்தரி, பிள்ளையார் கோவில் தெரு, பிரம்மதேசம்.

**அம்பாசமுத்திரம் மேற்கு ஒன்றியம்**

பொறுப்புக்குழு உறுப்பினர்கள் : 1. மா.ராமையா, பிள்ளையார்கோவில் தெரு, கோடாரங்குளம். 2. த.செல்வம், பெருமாள் கோவில் தெரு, சிவந்திபுரம். 3. ச. ஆறுமுகநயினார் (எ) ரவி, கல்சுண்டு காலனி, அடையக்கருங்குளம். 4. சு.க.நெடுஞ்செழியன், பெரிய தெரு, அம்பலவாணபுரம். 5. சே. நாராயணன், அய்யா கோவில் தெரு, சிவந்திபுரம் கஸ்பா. 6. நா.ரதிமாலா, மெயின் ரோ்டு, அடையகருங்குளம். 7. கா.அருந்தபசு, சங்கரன்கோவில் தெரு, சிவந்திபுரம் கஸ்பா. 8. இ. செல்வராஜ், பிள்ளையார் கோவில் தெரு, கோடாரங்குளம்.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18
நாள்: 19.2.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

---

### அரசு விழாவாக எடுத்து செயல்பட்டு வருவது பாராட்டுக்குரியது!

# தமிழறிஞர் மறைமலை அடிகள் வாழ்ந்த இல்லத்தை புதுப்பித்திட வேண்டும்!

## சட்டப் பேரவையில் பல்லாவரம் இ.கருணாநிதி கோரிக்கை!



*சென்னை,பிப்.20-*

சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின் போது பல்லாவரத்தில் தமிழறிஞர் மறைமலை அடிகள் பழமையான வீட்டினை புதுப்பித்திட வேண்டும் என்றும் அவர் வாழ்ந்த வீட்டின் அருகே உள்ள பெரிய பாலத்திற்கு அவரது பெயரை சூட்டிட வேண்டும் என்றும் கோரிக்கை வைத்தார்.

இதுகு குறித்த பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு:

**இ. கருணாநிதி:** பல்லாவரம் தொகுதியில் தமிழறிஞர் மறைமலை அடிகள் வாழ்ந்த இல்லம் இருக்கிறது. 18 ஆண்டுகளுக்கு முன்பு நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அந்த இல்லம் புதுப்பிக்கப்பட வேண்டுமென்று, ரூ.15 இலட்சம் நிதியுதவி வழங்கினார்கள். தற்போது அந்த இல்லம் பாழடைந்து கிடக்கின்றது. ஒவ்வொர் ஆண்டும், அது அரசு விழாவாக எடுத்து செயல்பட்டு வருகிறது. ஆகவே, தமிழறிஞர் மறைமலையடிகளார் இல்லத்தை புதுப்பித்துத் தர வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன். அதனருகில் பல்லாவரம் பெரிய பாலம் இருக்கின்றது. அவருடைய பெயர் அதற்கு சூட்டப்படுமா என்பதையும் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் மு.பெ. சாமிநாதன்:** ஐயா மறைமலையடிகளார் அவர்களுடைய இல்லம் பராமரிக்கப்பட வேண்டும் என்று சொல்லியிருக்கின்றார்கள். அதுகுறித்து துறை நடவடிக்கை எடுக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். மேம்பாலத்திற்கு பெயர் வைப்பது என்பது எங்கள் துறையினுடைய பணி அல்ல; அதற்கு அந்த துறை சார்ந்த, நெடுஞ்சாலை துறை அல்லது தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் மூலமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இருந்தாலும் முதலமைச்சர் அவர்கள் மூலமாக அதுகுறித்து நிச்சயமாக நடவடிக்கை எடுத்து, அவர் பெயர் வைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.